# அமைதி தேடி அலையும் நெஞ்சமே

அமைதி தேடி அலையும் நெஞ்சமே
அனைத்தும் இங்கு அவரில் தஞ்சமே –( 2 )
நிலையான சொந்தம் நீங்காத பந்தம்
அவரின்றி வேறில்லையே

**1**
போற்றுவேன் என் தேவனை
பறை சாற்றுவேன் என் நாதனை
எந்நாளுமே என் வாழ்விலே - ( 2 )
காடு மேடு பள்ளம் என்று
கால்கள் சோர்ந்து அலைந்த ஆடு
நாடுதே அது தேடுதே - ( 2 )

**2**
இறைவனே என் இதயமே
இந்த இயற்கையின் நல் இயக்கமே
என் தேவனே என் தலைவனே - ( 2 )
பரந்து விரிந்த உலகம் படைத்து
சிறந்த படைப்பாய் என்னைக் கண்ட
தேவனே என் ஜீவனே - ( 2 )